DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.
**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -26

| | | |
|---|---|---|
| Name | : திரு. ராதாகிருஷ்ணன் | Caste: |
| Father's Name: | திரு. பழனிவேல் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 22nd day of January -2024.

**A1 , A2, A5 to A9, A13 to A18 present. A11 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed. A3 produced.**

**முதல் விசாரணை**

நான் அரியலூர் மாவட்டம் வங்குடியில் வசித்து வருகிறேன். விவசாய கூலிவேலை செய்கிறேன். இறந்துபோன காசிநாதன், தர்மலிங்கம், மகாலிங்கம், பிரபு, சுரேஷ் ஆகியோரை தெரியும். அவர்கள் எனது ஊரை சேர்ந்தவர்கள். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்களும் எனது ஊரை சேர்ந்தவர்கள் தான். எங்கள் ஊரில் ரவிசந்திரன் தரப்பினருக்கும், காசிநாதன் தரப்பினருக்கும் முன்விரோதம் இருந்து வந்தது. காசிநாதன் தரப்பினர் நிலபிரச்சனையின் காரணமாக தேசிங்குபாலனை கொலை செய்துவிட்டார்கள். அதன் காரணமாக முன்விரோதம் இருந்துவந்தது.

தேசிங்குபாலன் கொலை சம்மந்தமாக காசிநாதன் தரப்பினர் போலிசாரால் கைது செய்யப்பட்டார்கள். கைது செய்யப்பட்ட நபர்கள் பெயிலில் வெளியே வந்து ஊருக்கு வந்துவிட்டார்கள். கடந்த 16.05.2008 அன்று மகாலிங்கம், ராஜலிங்கம், அமிர்தலிங்கம், சரேஷ், பிரபு ஆகியோர் வண்ணாங்குளத்திற்கு குளிக்க போய்இருக்கிறார்கள். அவர்கள்

குளித்துவிட்டு திரும்ப வந்தபோது ரவிசந்திரன் தரப்பினர் அவர்களை வழி மறைத்து வெட்டியதாக கேள்விபட்டேன்.

எதிரிகள் திருஞானம், ரவிசந்திரன் ஆகியோர் சுரேசை வெட்டியதாகவும், எதிரிகள் பிரபாகரனும், பழனிசாமியும் பிரபுவை வெட்டியதாகவும், எதிரிகள் தினேசும், ராஜதுரையும் பயந்துகொண்டு ஓடிய மகாலிங்கத்தை வெட்டியதாகவும், சத்தம் கேட்டு வீட்டைவிட்டு வெளியே வந்த காசிநாதன், தர்மலிங்கம் ஆகியோர்களையும் வெட்டிவிட்டதாகவும், எதிரிகள் சக்திவேல் மகன் ரமேசும், பாஸ்கரனும் தர்மலிங்கத்தை வெட்டியதாகவும், எதிரிகள் ராஜதுரையும், தினேசும் காசிநாதனை வெட்டியதாகவும், காசிநாதனின் மனைவி ஜானகி என்பவர் தடுக்கவந்தபோது அவரை எதிரிகள் திருவாளப்புத்தூர் ரமேசும், சிலம்பரசனும் வெட்டியதாகவும் கேள்விபட்டேன்.

தர்மலிங்கத்தின் தலையை காளியம்மன் கோவிலின் பக்கத்திலிருந்த சூலத்தில் குத்திவிட்டதாகவும், பிரபுவின் தலையானது காளியம்மன் கோவிலின் பின்புறம் கிடந்ததாகவும் கேள்விபட்டேன். நான் பயந்து கொண்டு வீட்டிலேயே இருந்துவிட்டேன். சம்பவம் நடந்த இடத்துபக்கம் நான் போகவில்லை. இறந்தவர்களின் உடலையும் நான் பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

நீதிமன்ற கேள்வி

1. கேள்வி– மேற்கண்ட சம்பவம் தொடர்பாக எங்கு வைத்து யார்மூலமாக எப்போது கேள்விபட்டீர்கள்?

பதில் – சம்பவம் நடந்த தினத்தன்று நான் காலையில் வேலைக்கு போய்விட்டு மதிய உணவிற்காக பிற்பகல் சுமார் 12.00 மணிக்கு நான் எனது வீட்டிற்கு திரும்பினேன். அப்போது சத்தம் கேட்டது. ஊரில் இருந்த நபர்கள் வெட்டிவிட்டதாக பேசிகொண்டார்கள். சாட்சி மாற்றி வீட்டிலிருந்த தனது பெற்றோர்கள் தான் தனக்கு தகவல் சொன்னதாக சொல்லுகிறார். வேறு யார்மூலமாகவும் நான் கேள்விபடவில்லை. எனது அப்பா பெயர் பழனிவேல், தாயார் பெயர் ஆண்டாள். ஆண்டாள் இன்று இந்நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். (அ.சா.25 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.) என் தகப்பனார் பழனிவேலும் இவ்வழக்கில் ஒரு சாட்சியாக

விசாரிக்கப்பட்டுள்ளார்.

**<u>1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வங்குடியில் கிழக்குதெரு, மேலத்தெரு, தெற்குதெரு, வடக்குதெரு, காலனிதெரு என்று தெருக்கள் இருக்கிறது என்றால் சரிதான். நான் மேலத்தெருவில் வசிக்கிறேன். நான் சம்பவ சமயத்தில் திருப்பூர் பனியன் கம்பெனியில் வேலை செய்தேன் என்றால் சரியல்ல. 16.05.2008 அன்று போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றாலும், அந்த விசாரணையில் நான் சம்பவம் எதனையும் நேரில் பார்க்கவில்லை என்று சொல்லியிருக்கிறேன் என்றாலும் சரிதான்.

சம்பவம் குறித்து நான் எவ்வாறு கேள்விபட்டேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் பெற்றோர் மூலமாக வழக்கு சம்பவம் குறித்து நான் தெரிந்துகொண்டேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். நான் வங்குடி மேலத்தெருவில் வசிப்பதாக போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். 16.05.2008 க்கு பின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

என் பெற்றோர் மூலமாக நான் வழக்கு சம்பவம் குறித்து கேள்விபட்டேன் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவேயில்லை என்றாலும், போலிசார் என்னை விசாரித்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. இறந்துபோன பிரபு எனது சித்தப்பா பாரியின் மகன். பிரபு எனது சித்தப்பா மகன் என்ற சங்கதியை போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன்.

தேசிங்குபாலன் கொலை செய்யப்பட்ட சமயத்தில் போலிசார் என்னை விசாரித்தார்கள். அந்த கொலையை நான் பார்க்கவில்லை. அந்த சங்கதியை நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன்.

**<u>6–ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இறந்துபோன காசிநாதன் எனக்கு பங்காளி முறையில் பெரியப்பா. போலிசார் விசாரணையில் நிலபிரச்சனையின் காரணமாகத்தான் காசிநாதன் குடும்பத்தினரால்

தேசிங்குபாலன் கொலைசெய்யப்பட்டதாக சொல்லியிருக்கிறேன். சம்பத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், நான் எந்த சங்கதியையும் கேள்விபடவில்லை என்றாலும், பிரபு எனது சித்தப்பா மகன் என்பதாலும், காசிநாதன் பெரியப்பா என்பதாலும், போலிசார் சொல்லிகொடுத்து எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>13–ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடந்த அன்று நான் வயலில் வேலைசெய்துவிட்டு நேராக எனது வீட்டிற்கு தான் வந்தேன். நான் வீட்டிற்கு வந்தபோது என் பெற்றோர் வீட்டில்தான் இருந்தார்கள். எந்தெந்த எதிரிகள் யார்யாரை வெட்டினார்கள் என்று எனது பெற்றோர்கள் சொல்லிதான் நான் தெரிந்துகொண்டேன்.

நான் சம்பவத்தினத்தன்று ஊரிலேயே இல்லை என்றாலும், பிரபு எனது சித்தப்பா மகன் என்பதால் போலிசார் சொல்லிகொடுத்து பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

**3, 8–ஆம் எதிரிகள் தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணையானது ஏற்றுக்கொள்ளப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.